**sns academy**

an International CBSE Finger Print School
Coimbatore

# இயல் 1 உரைநடை
# பேச்சு மொழியும் எழுத்து மொழியும்.

1. பேச்சுமொழிக்கும், எழுத்துமொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் நான்கனை விளக்குக.

| பேச்சு மொழி | எழுத்து மொழி |
|---|---|
| உலக வழக்கு | இலக்கிய வழக்கு |
| சொற்கள் குறுகி ஒலிக்கும் | முழுமையாக எழுதப்படும். |
| உணர்ச்சிக் கூறுகள் அதிகம். | உணர்ச்சிக் கூறுகள் குறைவு. |
| உடல்மொழி, குரல் ஏற்றத்தாழ்வு உண்டு. | உடல்மொழி, குரல் ஏற்றத்தாழ்வு இல்லை. |

2. வட்டாரமொழி எனப்படுவது யாது?

- பேச்சுமொழி இடத்திற்கு இடம் மாறுபடும்.
- மனிதர்களின் வாழ்வியல் சூழலுக்கு ஏற்பவும் மாறுபடும்.
- இவ்வாறு மாறுபடும் ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்களை வட்டார மொழி என்பர்.

3. மொழியின் இரு வடிவங்கள் யாவை? பேச்சு மொழியை விளக்குக.

(i) ஒரு மொழி உயிர்ப்போடு வாழ்வதற்குப் பேச்சுமொழித் தேவைப்படுகிறது.
(ii) காலம் கடந்து வாழ்வதற்கு எழுத்துமொழி தேவைப்படுகிறது.

(iii) எனவே பேச்சுமொழி, எழுத்துமொழி இவ்விரு வடிவங்களும் மொழியின் இரு கண்களாகும்.

(iv) வாயினால் பேசப்பட்டுப் பிறரால் கேட்டு உணரப்படுவது பேச்சுமொழியாகும்.

(v) மொழியின் உயிர் நாடியாக விளங்குவது பேச்சுமொழியே என்பர்.

4. எழுத்து மொழி பற்றி எழுதுக.